முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

**முன்னிலை :- திரு.இரா.சுப்பையா, பி.ஏ., பி.எல்.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருநெல்வேலி**

2022ம் ஆண்டு 20 ஆம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2052 பிலவ வருடம் தை 07ம் நாள்
**இ.ம.எண்.3 /2021 இன் அ.வ.எண்.454/2021**

1). ஞானமணியம்மாள் சத்திரம்

அதன் டிரஸ்டி ஏ.முருகப்பன்

2). கே.ஏ.முருகப்பன்

3). கே.ஏ.சண்முகவேல்

4). எம்.சரஸ்வதி

5). எம்.தையல்நாயகி

6). எம்.சுபா

7). எம்.செந்தில்நாதன் .... மனுதாரர்கள் / வாதிகள்

/எதிர்/

1). கே.ஏ.வேலப்பன்
2). சண்முகையா பாண்டியன் .... எதிர்மனுதாரர்கள் / 1,3 பிரதிவாதிகள்

இந்த மனுவானது 22.12.2021 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.பி.கமலநாதன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.வெங்கடேஸ்வரமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் / 3ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.மதிவதனபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பினர்களின் வாதங்களைக் கேட்டும் மனு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

## <u>உத்தரவு</u>

1). இந்த மனுவானது, மனு தபசில் சொத்தைப் பொறுத்து எதிர்மனுதாரர்கள் எவ்வித வில்லங்க பரிவர்த்தனைகளையும் செய்யக் கூடாது என்றும், மனு தபசில் சொத்தில் டாஸ்மார்க் ஒயின்ஷாப் கடையை திறக்கக் கூடாது என்றும், மனு

தபசில் சொத்தை 3ம் நபருக்கு குத்தகைக்கு விடக்கூடாது என்றும் இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்**

(i). மனு தபசில் சொத்தானது 200 ஆண்டுகளுக்கு மேலாக 1ம் மனுதாரர் ஞானமணியம்மாள் சத்திரத்திற்கு சொந்தமானது. தபசில் சொத்தின் பட்டா எண்.212 1ம் மனுதாரரின் பெயரில் உள்ளது. 1ம் மனுதாரர் மேற்படி தபசில் சொத்தைப் பொறுத்து வரி செலுத்தி வருகிறார். கடந்த 200 ஆண்டுகளாக தபசில் சொத்தானது 1ம் மனுதாரரின் அனுபவத்திலும், ஆளுகையிலும் இருந்து வருகிறது. 1ம் மனுதாரர் சத்திரத்திற்கு 2ம் மனுதாரர் முருகப்பன் என்பவர் தான் தற்போது மேனேஜிங் டிரஸ்டியாக உள்ளார். 3 முதல் 7 மனுதாரர்களும், 1ம் எதிர்மனுதாரர், சண்முகவேல், 2ம் பிரதிவாதி விசாலாட்சி அம்மாள் ஆகியோர்கள் அறங்காவலர்களாக உள்ளார்கள். 1ம் மனுதாரருக்கு சொந்தமான தபசில் சொத்தை 30.11.2015 அன்று சங்கர் பாபு என்பவருக்கு குத்தகைக்கு கொடுத்துள்ளார்.

(ii). 1ம் மனுதாரரும், சங்கர் பாபு என்பவரும் கடந்த 30.11.2015 மற்றும் 07.10.2021ல் ஒரு பதிவு செய்யப்பட்ட குத்தகை ஒப்பந்தம் பிறப்பித்துக் கொண்டுள்ளார்கள். மேற்படி சங்கர் பாபு அவர்கள் தபசில் சொத்தில் வாடகைதாரர் நிலையில் அனுபவத்திலும், ஆளுகையிலும் இருந்து வருகிறார். தபசில் சொத்தில் மேற்படி சங்கர் பாபு பயிரிடும் சம்சாரியாக இருந்து வருகிறார். மேற்படி சங்கர் பாபு அவர்கள் 1ம் மனுதாரருக்கு பாட்டம் செலுத்தி வருகிறார். 1ம் எதிர்மனுதாரர் தவிர 3ம் பிரதிவாதிக்கு தபசில் சொத்தில் எந்த உரிமையும் இல்லை. இந்த மனுதாரர்களை தவிர தபசில் சொத்தில் 3ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும், அனுபவமும் கிடையாது.

(iii). 3ம் பிரதிவாதி தபசில் சொத்தைப் பொறுத்து அன்னியர் ஆவார். 1ம் மனுதாரர் வாதியாக இருந்து இந்த 3ம் பிரதிவாதி சத்திரத்தின் நிர்வாகத்தில் தலையிடக் கூடாது என்று அ.வ.எண்.1347/1989 அசல் வழக்கு தாக்கல் செய்து திருநெல்வேலி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று

வழக்கு முழு விசாரணைக்கு பிறகு இந்த 1ம் மனுதாரருக்கு சாதகமாக 17.03.1998ல் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரையை எதிர்த்து 3ம் பிரதிவாதி எவ்வித மேல்முறையீடும் செய்யவில்லை. ஆகவே, திருநெல்வேலி மவாட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.1347/ 1989 தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரையே இறுதி முடிவானது.

(iv). இந்த 1ம் எதிர்மனுதாரர், 1ம் மனுதாரர் சத்திரத்திற்கு ஒரு டிரஸ்டி. ஆகையால் 1ம் எதிர்மனுதாரருக்கு தபசில் சொத்து மனுதாரரின் ஆளுகையிலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது என்று நன்கு தெரியும். 1ம் மனுதாரர் பெயருக்கு பட்டா எண்.212 பெற்று உள்ளார் என்பதும் தெரியும். பிராது தபசில் சொத்து 1வது எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது இல்லை. பிராது தபசில் சொத்து 1ம் எதிர்மனுதாரரின் தனிப்பட்ட சொத்து அல்ல. 1ம் எதிர்மனுதாரர் மாண்புமிகு திருநெல்வேலி மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த டிரஸ்ட் ஓ.பி.எண்,248/2017ல் மனு தபசில் சொத்து 1ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்று ஒத்துக் கொண்டுள்ளார். மேற்படி டிரஸ்ட் ஓ.பி.எண்,248/ 2017ல் வழக்கில் இந்த 1ம் எதிர்மனுதாரர் தபசில் சொத்தை அயிட்டம் நம்பர் 14ல் ஏ தபசிலில் 1வது அயிட்டம் ஆக காண்பிக்கப்பட்டுள்ளது.

(v). 1ம் எதிர்மனுதாரர் மோசடியாக 5ம் பிரதிவாதியின் வருவாய் ஆவணத்தில் பெயர் மாற்றம் செய்துள்ளார். 5ம் பிரதிவாதி தபசில் சொத்தைப் பொறுத்து 1ம் எதிர்மனுதாரர் பெயருக்கு வருவாய்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்வதற்கு எவ்வித அறிவிப்பும் இந்த மனுதாரருக்கு அனுப்பவில்லை. அது சட்டப்படி தவறு. பிராது தபசில் சொத்தில் 1ம் மனுதாரரின் உரிமையும், அனுபவமும் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை. 1ம் மனுதாரர் வருவாய் கோட்டாட்சி தலைவர், திருநெல்வேரி அவர்களிடம் மேல் முறையீடு தாக்கல் செய்திருந்தார். 1ம் எதிர்மனுதாரர் தபசில் சொத்தின் ஒரு பகுதியை 3 பிரதிவாதிக்கு 09.08.2021ல் குத்தகைக்கு விட்டுள்ளார். மேற்படி 1ம் எதிர்மனுதாரர், 3ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் 7ம் பிரதிவாதி அலுவலகமான பாளையங்கோட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் எண்.1 புத்தகம் 1ல் ஆவணம் எண்.5085/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

(vi). ஏற்கனவே மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளது போல, பிராது தபசில் சொத்து 1ம் எதிர்மனுதாரரின் தனிப்பட்ட சொத்து அல்ல. ஆகவே, 1ம் எதிர்மனுதாரர், 3ம் எதிர்மனுதாரருக்கு, 1ம் எதிர்மனுதாரர் தனிப்பட்ட சொத்தை குத்தகை ஒப்பந்தம் எழுதிக் கொடுக்க முடியாது. 09.08.2021 தேதியிட்ட குத்தகை ஒப்பந்தம் ஒரு மோசடி ஆவணம். பிராது தபசில் சொத்திற்கு வேறு வழிபாதை எதுவும் இல்லை. ஆனால், 1ம் எதிர்மனுதாரர் வேறு பொது பாதை தபசில் சொத்தை அடைவதற்கு உள்ளது என்று மோசடியாக கூறியுள்ளார். அவ்வாறு சொல்வது தவறு. 09.08.2021 தேதியிட்ட குத்தகை ஒப்பந்தப்படி 3ம் பிரதிவாதி தபசில் சொத்தின் அனுபவத்திலும், ஆளுகையிலும் இல்லை.

(vii). இந்த மனுதாரர் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது போல், மனுதாரர்களின் சொத்தில் வாடகைதாரர் நிலையில், சங்கர் பாபு என்பவரது ஆளுகையிலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது. மேலும் 3ம் பிரதிவாதி 8 முதல் 10 பிரதிவாதிகளிடம் எவ்விட கட்டிட வரைபட அனுமதியும் பெறாமல் தபசில் சொத்தில் கட்டிடம் கட்ட முயற்சி செய்கிறார். 11, 12 பிரதிவாதிகள், 3ம் பிரதிவாதிக்கு தபசில் சொத்தில் மின் இணைப்பு வழங்க முயற்சி செய்கிறார். மனுதாரர்கள் கடந்த 20.10.2021 தினமலர் நாளிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. 1ம் எதிர்மனுதாரர் தகுந்த பதில் அறிவிப்பை 23.10.2021 தினமலர் நாளிதழில் கொடுத்தார். பின்னர் 1ம் மனுதாரர் 26.10.2021ல் 1ம் எதிர்மனுதாரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார்.

(viii). 1ம் எதிர்மனுதாரர் கடந்த 30.10.2021ல் ஒரு பதில் அறிவிப்பு அனுப்பினார். அந்த பதில் அறிவிப்பில் பிராது தபசில் சொத்து ஆதியில் 1ம் எதிர்மனுதாரரின் தாயார் பெற்ற பாட்டியான T.M.P. தேவசேனா அம்மாள் அவர்கள் இறப்பிற்கு பிறகு 1ம் எதிர்மனுதாரர் சட்டப்படியான வாரிசு நிலையில் தபசில் சொத்தை அடைந்து அனுபவம் செய்து வந்தார் என்று கூறியுள்ளது சரியல்ல. பிராது தபசில் சொத்து T.M.P. தேவசேனா அம்மாள் அவர்களுக்கு பாத்தியப்பட்டதல்ல. ஷை T.M.P. தேவசேனா அம்மாள் ஒரு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் 02.11.1959ல் எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி T.M.P. தேவசேனா அம்மாள் எழுதிக் கொடுத்த பத்திரத்தில் பிராது தபசில் சொத்து காட்டப்படவில்லை. ஆகவே, தபசில் சொத்து அவருக்குரியது அல்ல. 26.10.2021ல் 1ம்

எதிர்மனுதாரருடன் ஏற்பட்டதாக சொன்ன குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் 3ம் பிரதிவாதி மனு தபசில் சொத்தில் கட்டிடம் கட்ட எவ்வித உரிமையும் கிடையாது. 3ம் பிரதிவாதியின் செயல் இந்நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் மட்டுமே கட்டுப்படுத்த முடியும் என்று இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

3. **1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை சுருக்கம்**

(1). மனுதாரர் சொத்தாக காட்டியுள்ள தபசில் சொத்து ஆதியில் எதிர்மனுதாரர் தயாரை பெற்ற பாட்டியான T.M.P. தேவசேனா அம்மாள் அவர்களுக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்திலும், ஆளுகையிலும் இருந்து வந்து மேற்படி T.M.P. தேவசேனா அம்மாள் அவர்கள் காலத்திற்கு பிறகு இந்த 1ம் எதிர்மனுதாரர் வாரிசு நிலையில் அடைந்து அதில் சர்வே வார்டு AY பிளாக் 26, T.S. நம்பர் 1, அய்யா சுப்பிரமணிய முதலியார் குமாரர் K.A. வேலப்பன் பேரில் உள்ளது என்பதே உண்மை நிலையாகும். மேற்படி உண்மை தெரிந்தும் இந்த மனுதாரர் வேண்டுமென்றே தபசில் சொத்தை 1ம் மனுதாரர் சத்திரத்திற்கு பாத்திப்பட்ட சொத்து என்பது போல ஆவணங்களை உற்பத்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

(2). கடந்த 20.10.2021ல் இந்த மனுதாரர் அவர்கள் தினமலர் நாளிதழில் கொடுத்த அறிவிப்பில் தற்போது டவுண் சர்வே எண்.6 பிளாக் 16, டவுண் சர்வே 24/1ல் ஞானமணியம்மாள் சத்திரம் என்று அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தார். அதே போல் 30.11.2015, 07.10.2021ல் இந்த 1ம் மனுதாரர் தபசில் சொத்தைப் பொறுத்து சங்கர்பாபு என்பவருக்கு குத்தகை ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொடுக்க ஷை மனுதாரருக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது. ஞானமணியம்மாள் சத்திரத்தின் மேனேஜர் டிரஸ்டியாக இந்த மனுதாரர் K.A.முருகப்பன் எந்த காலத்திலும் இருந்தது கிடையாது. எனவே, சட்டப்பூர்வ டிரஸ்டியாக இல்லாத காரணத்தினால் 30.11.2015, 07.10.2020ல் ஏற்பட்ட குத்தகை ஒப்பந்தம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல.

(3). மேலும், தபசில் சொத்தில் மனோகர் பெயிண்டர், தங்கராஜ் பெயிண்டர், தங்கமாரி ஆகியோர்கள் கடைகள் உள்ளது. மேற்படி நபர்கள் கடந்த 15

வருடங்களுக்கு மேலாக தபசில் சொத்தில் வாடகைதாரர்களாக இருந்து 1ம் எதிர்மனுதாரருக்கு வாடகை செலுத்தி வருகிறார்கள். இந்த 1ம் எதிர்மனுதாரருக்கு தனித்து பாத்தியப்பட்டு அனுபவத்திலும், ஆளுகையிலும் இருந்து வந்த சொத்தின் ஒரு பகுதியைத் தான் மேற்படி திருநெல்வேலி வண்ணார்பேட்டையைச் சேர்ந்த லேட்.பலவேசத் தேவர் அவர்கள் குமாரர் சண்முகையா அவர்களுக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட குத்தகை ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். மேற்படி ஆவணம் மோசடியான போலியான ஆவணம் கிடையாது. மேற்படி குத்தகை ஆவணம் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் ஆகும்.

(4). மனுதாரர் ஞானமணியம்மாள் சத்திரத்தின் மேனேஜிங் டிரஸ்டி என்பது தவறு. அவர் எந்த காலத்திலும் மேனேஜிங் டிரஸ்டியாக இருந்து செயல்பட்டது கிடையாது. அவ்வாறு உள்ள நிலையில், மேனேஜிங் டிரஸ்டி என மனு தாக்கல் செய்ய அவருக்கு சட்டப்படி உரிமை இல்லை. 30.11.2015 மற்றும் 07.10.2021 தேதியில் சங்கர்பாபு என்பவருக்கு இந்த மனுதாரர் குத்தகை ஒப்பந்தம் எழுதிக் கொடுத்தது சட்டப்படி செல்லாது. அவ்வாறு குத்தகை ஒப்பந்தம் எழுதிக் கொடுப்பதற்கு மற்ற டிரஸ்டிகள் யாரிடமும் எவ்வித அனுமதியும் சம்மதமும் பெறாமல் எழுதிக் கொடுத்த குத்தகை ஒப்பந்தம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல. வாஸ்தவத்தில் இந்த 1ம் எதிர்மனுதாரர் மேற்படி தபசில் சொத்தை பொறுத்து வில்லங்க, விற்கிரையம், பாராதீனம் செய்ய எவ்வித முயற்சியும் எந்த காலத்திலும் செய்தது கிடையாது.

(5). மேலும், மேற்படி தபசில் சொத்தை 3ம் நபருக்கு விற்பனை செய்து அந்த 3ம் நபர் தபசில் சொத்தில் டாஸ்மாக் கடை திறக்க முயற்சி செய்து வருகிறார் என்று கூறுவது இந்த மனுவிற்காக சொல்லப்பட்ட கற்பனை சங்கதிகள் ஆகும். இந்த 1ம் எதிர்மனுதாரர் சமூக அந்தஸ்துள்ள கௌரவமான குடும்பத்தை சேர்ந்தவர். ஆன்மீக பணியில் ஈடுபாடு கொண்டு பல்வேறு சமுதாய பணிகள் ஆற்றி வருகிறார். எனவே, அவர் எந்த காலத்திலும் சத்திரத்தின் சொத்தில் டாஸ்மாக் போன்ற சமூகத்தை சீரழிக்கும் மதுபான கடைக்கு குத்தகைக்கு கொடுக்க எள்ளளவும் எண்ணம் கொண்டவரல்ல. மனுதாரர் பொய்யான காரணங்களைக் கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

(6). திருநெல்வேலி மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் இந்த 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த Trust OP No.248/2017 நிலுவையில் உள்ள நிலையில் இந்த மனுவை தாக்கல் செய்ய மனுதாரருக்கு எவ்வித சட்ட உரிமையும் கிடையாது. மேலும் ஞானமணியம்மாள் சத்திரத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து C.S.No.1364/1995 என்ற வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனவே, இந்த மனுதாரர் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு கூறுப்பட்டுள்ளது.

**4. 2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை சுருக்கம்**

(1). மனு குறுந்தலைப்பிலும், நெடுந்தலைப்பிலும் அபிடவிட் குறுந்தலைப்பிலும் கே.ஏ.முருகப்பன் என்பவரை ஞானமணியம்மாள் சத்திரம் மேனேஜிங் டிரஸ்டி என கூறப்பட்டது தவறாகும். மேற்படி கே.ஏ.முருகப்பன் அவர்களுக்கு ஞானமணியம்மாள் சத்திரத்தின் மேனேஜிங் டிரஸ்டி என கூறிக் கொண்டு மனுவை தாக்கல் செய்யவும் உரிமை கிடையாது. மனு தபசில் சொத்து 1வது மனுதாரருக்கு 200 வருடங்களுக்கு மேலாக பாத்தியப்பட்டது எனவும், மேற்படி ஞானமணியம்மாள் சத்திரத்திற்கு 2வது மனுதாரர் மேனேஜிங் டிரஸ்டி எனவும் மனு அபிடவிட்டில் கூறப்பட்டது தவறாகும். ஞானமணியம்மாள் சத்திரத்திற்காக 2வது மனுதாரர் 30.11.2015ல் மனு தபசில் சொத்தை குத்தகைக்கு விடுவதற்கு உரிமை கிடையாது. 2வது மனுதாரரால் கூறப்படும் 30.11.2015 மற்றும் 07.10.2021 தேதிய ரிஜிஸ்டர்டு குத்தகை ஆவணங்கள் மோசடியாக உருவாக்கப்பட்டதாகும்.

2). மேற்படி குத்தகை ஆவணங்கள் ஞானமணியம்மாள் சத்திரத்தையோ, 1வது எதிர்மனுதாரரையோ கட்டுப்படுத்தாது. மனு தபசில் சொத்தில் ஆர்.சங்கர்பாபு என்பவர் குத்தகைதாரர் என்னும் நிலையில் ஆண்டு அனுபவித்து வருவதாகவும் அவர் குத்தகைதாரர் என்னும் நிலைமையில் விவசாயம் செய்து வருவதாகவும், ஷை ஆர்.சங்கர் பாபு ஞானமணியமமாள் சத்திரத்திற்கு பாட்டம் செலுத்தி வருவதாகவும் மனு தபசில் சொத்தின் எதிர்மனுதாரர்களுக்கு உரிமையில்லை எனவும், எதிர்மனுதாரர்கள் பிராது தபசில் சொத்தில் அனுபவம் செய்யவில்லை எனவும், இந்த எதிர்மனுதாரர் மனு தபசில் சொத்திற்கு அன்னியர் எனவும் மனு அபிடவிட்டில் கூறப்பட்டது தவறாகும்.

3). மனு அபிடவிட்டில் கூறப்பட்ட ஆர்.சங்கர் பாபு என்பவர் கட்டுக் குத்தகை விவசாயி கிடையாது. ஷை ஆர்.சங்கர் பாபு என்பவர் ஆர்யாஸ் என்னும் பெயரில் தமிழகம் முழுக்க பிரபலமான ஹோட்டல் தொழில் செய்து வருகிறார். மேலும் சூப்பர் மார்க்கெட்டுகளும் நடத்தி வருகிறார். மேலும், ஆர்.சங்கர் பாபு தமிழகம் முழுக்க தங்கும் விடுதிகள் சொந்தமாக கட்டி நடத்தி வருகிறார்.ஷை ஆர்.சங்கர் பாபு என்பவர் தமிழகத்திலுள்ள பெரும் கோடீஸ்வரர்களில் ஒருவரும் பல கோடிகளுக்கு அதிபதியும் ஆகும். மனு தபசில் சொத்தை அபகரித்து அதில் கட்டிடங்கள் கட்டுவதற்காக ஷை ஆர்.சங்கர் பாபு என்பவர் மோசடியாக மனுவில் கூறப்பட்ட குத்தகை ஆவணங்களை தயாரித்துள்ளார். மனு தபசில் சொத்து உள்பட 2ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட குடும்ப சொத்துக்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் 2ம் மனுதாரர் அடங்கிய குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட வி.எம்.சத்திரத்தில் அமைந்துள்ள அருணாச்சலேஸ்வரர் கோவிலுள்ள பலகோடி மதிப்பிலான நிலங்களை மோசடியாக விற்பனை செய்வதற்கு இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர் தடையில்லா சான்றிதழ் வழங்கியது போன்று போலி சான்றிதழ் தயார் செய்து சார் பதிவாளர் அலுவலகத்தில் 2ம் வாதி தாக்கல் செய்த போது மேற்படி மோசடி கண்டுபிடிக்கப்பட்டு அவர் மீது மாநகர குற்றப்பிரிவு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

4). ஏற்கனவே 2வது மனுதாரர் தம்மை ஞானமணியம்மாள் சத்திரத்தின் முதன்மை அக்தார் என பொய்யாகக் கூறி பாளையங்கோட்டை தாலுகா, பாளையங்கோட்டை கிராமம் பகுதி 1 (டி.எஸ்.நம்பர் 738/2ல் 360 சதுர அடியிலுள்ள கதவு எண்.180ஐ) உரிமை மாற்றவும் வாடகைக்கு விடக் கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டு 1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.374/2012 வழக்கு 22.08.2019ல் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு மனுதாரருக்கு உரிமை கிடையாது. ஞானமணியம்மாள் சத்திரத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து சென்னை உயர் நீதிமன்றத்தில் சி.எஸ்.நம்பர் 1364/1995 என வழக்கு நிலுவையில் இருக்கும் போது இந்த மனுவை தாக்கல் செய்ய மனுதாரருக்கு உரிமை கிடையாது.

5). 1வது எதிர்மனுதாரரை ஞானமணியம்மாள் சத்திரம் டிரஸ்டின் மேனேஜிங் டிரஸ்டி எனவும் ஷை சத்திரத்தின் சொத்துக்களின் நிர்வாகஸ்தர் எனவும்,

விளம்புகை பரிகாரம் வேண்டியும், 2 முதல் 7 மனுதாரர்களை 2வது டிரஸ்டிசிப் எனும் நிலையிருந்து நீக்கரவு செய்ய வேண்டுமெனவும் 1வது எதிர்மனுதாரர் திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த டிரஸ்ட் ஓ.பி.எண்.248/ 2017 மனு நிலுவையில் இருக்கும் போது இந்த மனுவை தாக்கல் செய்வதற்கு மனுதாரருக்கு உரிமை கிடையாது. ஞானமணியம்மாள் சத்திரத்தின் நிர்வாகத்தில் 2ம் எதிர்மனுதாரர் இடைஞ்சல் செய்யக் கூடாதெனவும் 1வது மனுதாரர் அ.வ.எண்.1347/99 என அசல் வழக்கு தாக்கல் செய்ததாக பிராதில் கூறப்பட்டது தவறாகும்.

6). ஷை வழக்கு 17.03.1998ல் மனுதாரருக்கு சாதகமாக டிகிரி ஆனது எனவும், அதை எதிர்த்து 2வது எதிர்மனுதாரர் மேல்முறையீடு செய்யவில்லை என மனு அபிடவிட்டில் கூறிய சங்கதியை நிரூபிக்க வேண்டியது மனுதாரருடைய கடமையாகும். அல்லாத பட்சத்தில் அது தவறாகும். ஞானமணியம்மாள் சத்திரம் 1ம் எதிர்மனுதாரர் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டதாகும். எனவே, ஞானமணியம்மாள் சத்திரத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் 1ம் எதிர்மனுதாரருக்கும் உரிமையுண்டு. எனவே, 1ம் எதிர்மனுதாரர் 09.08.2021ல் டி.எஸ்.நிர் 1 லுள்ள நிலத்தில் 11.15 செண்ட் நிலத்தை பொறுத்து குத்தகை ஆவணம் ஏற்படுத்துவதற்கு தடையேதும் கிடையாது. 09.08.2021 தேதிய குத்தகை ஆவணம் மோசடியானதும் அல்ல. பிராது சொத்தில் செல்வதற்கு பாதை இல்லையென மனு அபிடவிட்டில் கூறப்பட்டது தவறாகும்.

7). 09.08.2021 தேதிய குத்தகை ஆவணம் படி 2ம் எதிர்மனுதாரர் ஷை குத்தகை ஆவண சொத்தில் அனுபவத்தில் இல்லையென மனு அபிடவிட்டில் கூறப்பட்டது தவறாகும். உண்மையில் 2வது மனுதாரருக்கு தான் ஆர்.சங்கர் பாபு என்பவருக்கு பிராது தபசில் சொத்தை குத்தகை கொடுப்பதற்கு உரிமை கிடையாது. ஷை குத்தகை ஆவண சொத்தில் ஆர்.சங்கர் பாபு அனுபவத்திலும் இல்லை. 3வது எதிர்மனுதாரர் மனு தபசில் சொத்தில் கட்டிடம் கட்டுவதற்கு மின் இணைப்பு பெறுவதற்கும் முயற்சித்து வருவதாகவும் மனு அபிடவிட்டில் கூறப்பட்டது தவறாகும். மேலும் மனு அபிடவிட்டில் மனுதாரர் கூறியுள்ள காரணங்களை அவரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். எனவே, இம்மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு கூறப்பட்டுள்ளது.

5). இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6). இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதே.

7). இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தரப்பில், தபசில் சொத்தானது 1ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்றும், 2ம் மனுதாரர் அதன் மேனேஜிங் டிரஸ்டி என்றும், மற்ற மனுதாரர்கள் அதன் அறங்காவலர்கள் என்றும், 1ம் எதிர்மனுதாரரும், 1ம் மனுதாரர் சத்திரத்தின் அறங்காவலர்களில் ஒருவர் என்றும், தபசில் சொத்து கடந்த 200 ஆண்டுகளுக்கு மேலாக பட்டா எண்.212ன் படி 1ம் மனுதாரரின் அனுபவத்திலும், ஆளுகையிலும் உள்ளதாகவும், மேற்படி சொத்தை 1ம் மனுதாரர் மூலமாக 30.11.2015 மற்றும் 07.10.2021 தேதிகளில் சங்கர் பாபு என்பவருக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டு அவர் அனுபவத்தில் உள்ளதாகவும், அதற்கு பாட்டம் 1ம் மனுதாரருக்கு செலுத்தி வருவதாகவும், 2ம் எதிர்மனுதாரருக்கும், தபசில் சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றும், மனுதாரர் தரப்பில், 2ம் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரரின் செயல்பாடுகளில் இடைஞ்சல் செய்யக் கூடாது என அ.வ.எண்.1347/1989 என்ற வழக்கை திருநெல்வேலி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, மேற்படி வழக்கு தீவிர விசாரணைக்கு பின்னர் 1ம் எதிர்மனுதாரருக்கு சாதமாக 17.03.1998ல் தீர்ப்பளிக்கப்பட்டதாகவும், அதற்கு எதிராக 2ம் எதிர்மனுதாரர் எந்த மேல் முறையீடும் செய்யவில்லை என்றும், மேற்கண்ட சங்கதிகளை அனைத்தையும் 1ம் எதிர்மனுதாரர் அறிவார் என்றும், 1ம் எதிர்மனுதாரர் தபசில் சொத்து 1ம் மனுதாரருக்கு சொந்தம் என ஒப்புக் கொண்டு திருநெல்வேலி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் டிரஸ்ட் ஓ.பி.எண்.248/2017 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதாகவும், 1ம் எதிர்மனுதாரர் மோசடியாக 5ம் பிரதிவாதி துணையுடன் மனுதாரர்களிடம் எந்த ஆட்சேபணையும் பெறாமல் வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்துள்ளதாகவும், அதனை ரத்து செய்ய 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல் முறையீடு தாக்கல்

செய்துள்ளதாகவும், இந்நிலையில் 09.08.2021ல் 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரருக்கு 7ம் பிரதிவாதி பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு குத்தகை ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துள்ளதாகவும், அதற்கு அவருக்கு எந்த உரிமையும் இலலை என்றும், அதில் மோசடியாக தபசில் சொத்திற்கு பொதுப் பாதை உள்ளதாக குறிப்பிட்டுள்ளதாகவும், தற்போது தபசில் சொத்து சங்கர் பாபு என்பவரின் அனுபவத்தில் உள்ள நிலையில், அதில் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித அனுமதியும் பெறாமல் கட்டுமானம் கட்ட முயற்சித்து வருவதாகவும், அதற்கு மின் இணைப்பு பெறவும் முயற்சித்து வருவதாகவும், இது குறித்து 1ம் மனுதாரர் தரப்பில் 20.10.2021ல் செய்தித் தாள் மூலம் பொது அறிவிப்பு கொடுக்கப்பட்டு, அதற்கு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில், தவறான சங்கதிகளுடன் 23.10.2021 மறுப்பு அனுப்பப்பட்டதாகவும், பின்னர் 1ம் மனுதாரர் தரப்பில், 1ம் எதிர்மனுதாரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டதாகவும், அதற்கு அவர்கள் பதில் அறிவிப்பும் அனுப்பியதாகவும், அதில் தபசில் சொத்தை தேவசேனா அம்மாளுக்கு பாத்தியப்பட்டதாக தவறுதலாக குறிப்பிட்டுள்ளதாகவும், மேற்படியார் எழுதி வைத்த 02.12.1959 தேதியிட்ட செட்டில் மெண்ட் ஆவணத்தில் தபசில் சொத்து குறிப்பிடவில்லை என்றும், தற்போது தபசில் சொத்தை எதிர்மனுதாரர்கள், 3ம் நபர் மூலம் டாஸ்மார்க் கடைக்கு குத்தகைக்கு விட முயற்சி செய்து வருவதால், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இம்மனு அனுமதிக்கப்படாவிடில் மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படக்கூடும் என்றும், மனுதாரர்கள் தரப்பில் பட்டா ம.சா.ஆ.1 ஆகவும், தீர்வை ரசீதுகள் ம.சா.ஆ.2 ஆகவும், குத்தகை ஆவணங்கள் ம.சா.ஆ.3 முதல் ம.சா.ஆ.5 ஆகவும், தினமலர் நாளிதழ் அறிவிப்புகள் ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.7 ஆகவும், வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.8 ஆகவும், பதில் அறிவிப்பு ம.சா.ஆ.9 ஆகவும், செட்டில்மெண்ட் ஆவணம் ம.சா.ஆ.10 ஆகவும், டிரஸ்ட் ஓ.பி.எண்.248/ 2017 மனுவாக ம.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதாக கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் முன் வைத்துள்ளார்.

8). 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், தபசில் சொத்தானது ஆதியில் டி.எம்.பி. தேவசேனா அம்மாளுக்கு பாத்தியப்பட்டு அவர் காலத்திற்கு பிறகு 1ம் எதிர்மனுதாரர் வாரிசு நிலைமையில் அனுபவித்து வருவதாகவும், இந்த விபரங்களை தெரிந்து கொண்டு தபசில் சொத்து 1ம் மனுதாரர் சத்திரத்திற்கு

பாத்தியப்பட்டது என பொய்யான ஆவணங்களை உருவாக்கி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், தபசில் சொத்தை 1ம் மனுதாரர் 30.11.2015, 07.10.2021 தேதியிட்ட குத்தகை ஆவணங்களை சங்கர் பாபு என்பவருக்கு பிறப்பிக்க அதிகாரம் இல்லை என்றும், 2ம் மனுதாரர் எந்த காலத்திலும் 1ம் மனுதாரர் சத்திரத்தில் மேனேஜர் டிரஸ்டியாக செயல்பட்டது இல்லை என்றும், தபசில் சொத்தை மனோகர் பெயிண்டர், தங்கராஜ் பெயிண்டர், தங்கமாரி ஆகியோர்கள் கடை 15 ஆண்டுகளுக்கு மேலாக இருப்பதாகவும், அவர்கள் 1ம் எதிர்மனுதாரருக்கு வாடகை செலுத்தி வருவதாகவும், அந்த சொத்தின் ஒரு பகுதியை தான் 2ம் எதிர்மனுதாரருக்கு குத்தகைக்கு கொடுத்துள்ளதாகவும், அதற்கு 1ம் எதிர்மனுதாரருக்கு முழு உரிமை உள்ளதாகவும், 1ம் எதிர்மனுதாரர் தபசில் சொத்தைப் பொறுத்து எவ்வித வில்லங்க, விற்கிரையம், பரிவர்த்தனை செய்ய ஒரு போதும் முயற்சி செய்யவில்லை என்றும், மனுவிற்கான காரணம் மற்றும் வழக்கு மூலம் பொய்யானது என்றும், 1ம் எதிர்மனுதாரர் சமூக அந்தஸ்துள்ள கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த ஆன்மீக பணியில் ஈடுபாடு கொண்ட, சமூக பணி செய்து வருகிறார் என்றும், அவர் ஒரு போதும் சத்திரத்தின் சொத்தில் சமூகத்தை சீரழிக்கும் மதுபான கடைக்கு குத்தகைக்கு கொடுக்க மாட்டார் என்றும், சத்திரத்தின் சொத்துக்களைப் பொறுத்து ஏற்கனவே டிரஸ்ட் ஓ.பி.எண்.248/2017 நிலுவையில் உள்ளதால், இந்த வழக்கை தாக்கல் செய்ய மனுதாரர்களுக்கு உரிமை இல்லை என்றும், சத்திரத்தின் சொத்துக்களைப் பொறுத்து சி.எஸ்.எண்.1364/1995 என்ற வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் வாதம் முன் வைத்துள்ளதை அறிய முடிகிறது.

9). 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர் சொல்லியுள்ள சங்கர் பாபு என்பவர் ஒரு விவசாயி கிடையாது என்றும், அவர் தமிழகம் முழுவதும் ஹோட்டல் தொழில் செய்து வருவதாகவும், எனவே, அவருக்கு மனுதாரர் தரப்பில் ஏற்படுத்திக் கொடுத்த குத்தகை ஆவணங்கள் செல்லாது என்றும், அந்த ஆவணங்களை பிறப்பிக்க 1ம் மனுதாரருக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், ஏற்கனவே சத்திர சொத்துக்களை 2ம் மனுதாரர் தன்னை முதன்மை அக்தர் எனக் கூறி அதை உரிமையியல் மாற்றம் செய்யக் கூடாது என திருநெல்வேலி 1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில்

தாக்கல் செய்த அ.வ.எண்.374/2012 தீவிர விசாரணைக்கு பின்னர் 22.08.2019ல் தள்ளுபடி செய்யப்பட்டதாலும், ஏற்கனவே சத்திர சொத்துக்களைப் பொறுத்து சென்னை உயர் நீதிமன்றத்தில் சிஎஸ்.எண்.1364/1995 என்ற வழக்கு நிலுவையில் உள்ளதாலும், ஏற்கனவே சத்திரத்தின் சொத்துக்களைப் பொறுத்து டிரஸ்ட் ஓ.பி.எண்.248/2017 திருநெல்வேலி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாலும், மனுதாரர்களுக்கு இவ்வழக்கை தாக்கல் செய்ய உரிமை இல்லை என்றும், மனுதாரர்கள் தபசில் சொத்தின் அனுபவத்தில் ஒரு போதும் இல்லை என்றும், சத்திரத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு உரிமை உண்டு என்பதால், அவர் அதைப் பொறுத்து குத்தகை ஆவணம் பிறப்பிக்க முழு உரிமை உண்டு என்றும், அ.வ.எண்.374/2012 வழக்கின் தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை ஆன எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 ஆவணங்களை பரிசீலனை செய்து இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் முன் வைத்துள்ளதை அறிய முடிகிறது.

10). இரு தரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்களை முதல் நோக்கில் பரிசீலனை செய்கையில், 1ம் மனுதாரர் சத்திரத்தில் 1ம் எதிர்மனுதாரரும் அறங்காவலர் என்பது தெரிய வருகிறது. அது போல, தபசில் சொத்தும் 1ம் மனுதாரர் சத்திரத்திற்கு பாத்தியப்பட்டது என்பதும், 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த ம.சா.ஆ.11 டிரஸ்ட் ஓ.பி.எண்.248/2017 மனு நகலை பரிசீலனை செய்த போது தெரிய வருகிறது. மேற்கண்ட சங்கதியும் இரு தரப்பிலும் மறுக்கப்படவில்லை.

11). மேற்கண்ட சூழ்நிலையில், 1ம் மனுதாரர் தரப்பில், தபசில் சொத்தானது ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.4 ஆவணங்களின் படி சங்கர் பாபு என்பவருக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வருவாய் ஆவணங்களில் மனுதாரர்களுக்கு தெரியாமல் சர்வே எண்ணை மாற்றம் செய்து ம.சா.ஆ.5 மூலம் 2ம் மனுதாரருக்கு மோசடியாக குத்தகைக்கு கொடுக்கப்பட்டதாகவும், அதன் மூலம் 2ம் எதிர்மனுதாரர் அதில் அனுமதியின்றி கட்டிடம் கட்டவும், மின் இணைப்பு பெறவும், டாஸ்மாக் கடைக்கு குத்தகைக்கு கொடுக்கவும் முயற்சி செய்து வருவதாக இம்மனுவிற்கான மூலம் முன் வைக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

12). மனு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த டிரஸ்ட் ஓ.பி.எண்.248/2017 வழக்கானது திருநெல்வேலி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதும், அதில் மனு தபசில் சொத்து உள்ளடங்கி உள்ளதும் தெரிய வருகிறது. தபசில் சொத்தைப் பொறுத்து 1ம் மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் தங்கள் குடும்ப சொத்து என்றும், தங்கள் குடும்ப டிரஸ்ட்க்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் வாதம் முன் வைத்துள்ளதும், ம.சா.ஆ.3 முதல் ம.சா.ஆ.5 குத்தகை ஆவணங்கள் பிறப்பித்துள்ளதும் தெரிய வருகிறது.

13). மேற்கண்ட சூழ்நிலையில், அசல் வழக்கானது ம.சா.ஆ.5 ஆவணம் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள நிலையில், மேற்கண்ட அசல் வழக்கில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் பரிசீலனைக்கு பிறகே சொத்தின் அனுபவம் குறித்து முடிவு செய்ய இயலும் என்பதால், இந்த சூழ்நிலையில், மனுதாரர் தரப்பில் தபசில் சொத்தின் அனுபவத்தைப் பொறுத்து முதன்மை தோற்ற வழக்கு துலங்காத நிலையில், இம்மனுவை அனுமதிக்க இயலாது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இம்மனுவிற்கான பரிசீலனை அசல் வழக்கில் தரப்பினர்களின் கட்சிக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது.

***இறுதியில் இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.செலவு தொகை இல்லை.***

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் எழுதப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஜனவரி திங்கள் 20ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/-இரா.சுப்பையா,ள
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

**1). மனுதாரர் தரப்பு சாட்சிகள் பட்டியல்**

| வ.எண். | சாட்சியின் பெயர் | சாட்சியின் வரிசை |
|---|---|---|
| -- | -- | -- |

**2). மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் பட்டியல்**

| வ. எண் | தேதி | ஆவண விவரம் | சான்றாவண வரிசை | தன்மை |
|---|---|---|---|---|
| 1. | 28.07.2011 | பட்டா | ம.சா.ஆ.1 | கணினி நகல் |
| 2. | -- | தீர்வை ரசீதுகள் | ம.சா.ஆ.2 | புகைப்பட நகல் |
| 3. | 30.11.2015 | குத்தகை ஒப்பந்தம் | ம.சா.ஆ.3 | சான்றிட்ட நகல் |
| 4. | 07.10.2021 | குத்தகை ஒப்பந்தம் | ம.சா.ஆ.4 | புகைப்பட நகல் |
| 5. | 09.08.2021 | குத்தகை ஆவணம் | ம.சா.ஆ.5 | சான்றிட்ட நகல் |
| 6. | 20.10.2021 | தினமலர் நாளிதல் அறிவிப்பு | ம.சா.ஆ.6 | அசல் |
| 7. | 23.10.2021 | தினமலர் நாளிதழ் அறிவிப்பு | ம.சா.ஆ.7 | அசல் |
| 8. | 26.10.2021 | வழக்கறிஞர் அறிவிப்பு | ம.சா.ஆ.8 | அலுவலக நகல் |
| 9. | 30.10.2021 | பதில் அறிவிப்பு | ம.சா.ஆ.9 | அலுவலக நகல் |
| 10. | 02.12.1959 | செட்டில்மெண்ட் பத்திரம் | ம.சா.ஆ.10 | சான்றிட்ட நகல் |
| 11. | -- | டிரஸ்ட் ஓ.பி.எண்.248/2017 மனு | ம.சா.ஆ.11 | புகைப்பட நகல் |

**3). எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் பட்டியல்**

| வ.எண். | சாட்சியின் பெயர் | சாட்சியின் வரிசை |
|---|---|---|
| -- | -- | -- |

**4). எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் பட்டியல்**

| வ.எண். | தேதி | ஆவண விவரம் | சான்றாவண வரிசை | தன்மை |
|---|---|---|---|---|
| 1. | -- | அ.வ.எண்.374/2012 வழக்கின் தீர்ப்பாணை | எ.ம.சா.ஆ.1 | நகல் |
| 2. | -- | அ.வ.எண்.374/2012 வழக்கின் தீர்ப்புரை | எ.ம.சா.ஆ.2 | நகல் |

ஒப்பம்/-இரா.சுப்பையா,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

முு.மா.உ.நீ.திருநெல்வேலி
**இ.ம.எண்.**3/2021
**இன்**
**அ.வ.எண்.**454/2021
நேரிய **உத்தரவு**
**நாள்.** 20.01.2022

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

முன்னிலை : **திரு.இரா.சுப்பையா, பி.ஏ., பி.எல்.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**திருநெல்வேலி.**

2022 ம் ஆண்டு ஜனவரி 20 ஆம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.3/2021 அதன் அ.வ. எண்.454/2021**

| | |
|---|---|
| 1). | ஞானமணியம்மாள் சத்திரம், அதன் மேனேஜிங் டிரஸ்டி கே.ஏ.முருகப்பன், த/பெ.லேட்.அய்யா சுப்பிரமணிய முதலியாா், இந்து, வயது 70, அலுவலகம் கதவு எண்.3/11, சிவன் கோவில் கிழக்கு ரத வீதி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி. |
| 2). | கே.ஏ.முருகப்பன், த/பெ.லேட்.அய்யா சுப்பிரமணிய முதலியார், இந்து, வயது 70, வசிப்பிட முகவரி கதவு எண்.2, சிவன் கோவில் கிழக்கு ரத வீதி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி. |
| 3). | கே.ஏ.சண்முகவேல், த/பெ.லேட்.கே.அய்யா சுப்பிரமணிய முதலியார், இந்து, வயது 64, வசிப்பிட முகவரி கதவு எண்.3/11, சிவன் கோவில் கிழக்கு ரத வீதி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி. |
| 4). | எம்.சரஸ்வதி, த/பெ.லேட்.வி.முத்து வீரப்பன், இந்து, வயது 48, வசிப்பிட முகவரி, கதவு எண்.17/8, பழனி ஆண்டவர் கோவில் தெரு, சிந்தாதிரிபேட்டை, சென்னை – 600 002. |
| 5). | எம்.தையல் நாயகி, த/பெ.லேட்.வி.முத்து வீரப்பன், இந்து, வயது 47, வசிப்பிட முகவரி கதவு எண்.17/8, பழனி ஆண்டவர் கோவில் தெரு, சிந்தாதிரிபேட்டை, சென்னை – 600 002. |
| 6). | எம். சுபா, த/பெ.லேட்.வி.முத்து வீரப்பன், இந்து, வயது 44, வசிப்பிட முகவரி கதவு எண்.17/8, பழனி ஆண்டவர் கோவில் தெரு, சிந்தாதிரிபேட்டை, சென்னை – 600 002. |
| 7). | எம்.செந்தில் நாதன், த/பெ.லேட். வி.முத்து வீரப்பன், இந்து, வயது 38, வசிப்பிட முகவரி கதவு எண்.17/8, பழனி ஆண்டவர் கோவில் தெரு, சிந்தாதிரிபேட்டை, சென்னை – 600 002. |

..... மனுதாரர்கள் / வாதிகள்

/எதிர்/

| | |
|---|---|
| 1). | கே.ஏ.வேலப்பன், த/பெ.லேட்.அய்யா சுப்பிரமணிய முதலியார், இந்து, வயது 68 வசிப்பிட முகவரி கதவு எண்.88,89 செங்கோட்டை ரோடு, காசிமேஜர்புரம், குற்றாலம், தென்காசி தாலுகா. |
| 2). | சண்முகையா பாண்டியன், த/பெ.லேட்.பலவேச தேவர், இந்து, வயது 55, வசிப்பிட முகவரி, கதவு எண்.6 ஏ, திருகோவையார் தெரு, வண்ணார்பேட்டை –3. |

.... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்.

இந்த மனுவானது, மனு தபசில் சொத்தைப் பொறுத்து எதிர்மனுதாரர்கள் எவ்வித வில்லங்க பரிவர்த்தனைகளையும் செய்யக் கூடாது என்றும், மனு தபசில் சொத்தில் டாஸ்மார்க் ஒயின்ஷாப் கடையை திறக்கக் கூடாது என்றும், மனு தபசில் சொத்தை 3 ம் நபருக்கு குத்தகைக்கு விடக் கூடாது என்றும் இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதார்களால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151 ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவானது 22.12.2021 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.பி.கமலநாதன் அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதார் / 1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.வெங்கடேஸ்வரமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதார்/ 3 ம்பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.மதிவதன பாண்டியன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பினர்களின் வாதங்களைக் கேட்டும் மனு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

## உத்தரவாணை

1). இந்த மனுவானது தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது

2). செலவு தொகை இல்லை.

(இரு தரப்பிலும் செலவு விபர பட்டியல் தாக்கல் இல்லை)

## தபசில்

பாளையங்கோட்டை பதிவு மாவட்டம், மேற்படி சப்ரி சரகம், பாளையங்கோட்டை தாலுகா, பாளையங்கோட்டை கிராமம் பகுதி –1, பட்டா எண்.212 ல் கண்ட அயன் நஞ்சை.

சா்வே 69/1ம் நம்பர் ஏக்கர் 5/23 தற்போது டவுண் சர்வே வார்டு 6, பிளாக் 16, டவுண் சர்வே 13 ம் நம்பர் "ஞானமணியம்மாள் சத்திரம்".

சர்வே 69/1ம் நம்பர் ஏக்கர் 5.23 தற்போது டவுண் சர்வே வார்டு " AY ", பிளாக் 26, T.S.No.1, "அய்யா சுப்பிரமணிய முதலியாா் குமாரர் கே.ஏ.வேலப்பன்.

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ம் நாள் என்னுடைய கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

மு.மா.உ.நீ. திருநெல்வேலி

இ.ம.எண்.3/2021

அதன்

அ.வ.எண்.454/2021

உத்தரவாணை

நாள்–20.01.2022